# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **S.T.C. No. 266/2025** |
| Prosecution witness | : | P.W. 1 |
| Name | : | ராதாகிருஷ்ணன் |
| Father's /Husband Name | : | சக்கரபாணி |
| Village | : | திருவாரூர் |
| Taluk | : | திருவாரூர் |
| Age | : | 61 |
| Occupation | : | சிறப்பு உதவி ஆய்வாளர் (ஓய்வு) |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 24th day of March 2026.Accused present.

**முதல் விசாரணை**

நான் குடவாசல் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்று திருவாரூரில் வசித்து வருகிறேன். கடந்த 01.02.2025 ந் தேதி இரவு 08.00 மணிக்கு குடவாசல் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது நானும், உதவி ஆய்வாளர் சந்திரசேகரன் என்பவரும் தலைமைக் காவலர் சாமிநாதன் என்பவரும் முதல்நிலைக் காவலர் சசிகுமார் என்பவரும் குடவாசல் கடைத்தெருவில் ரோந்து செய்து கண்காணித்து வந்தபோது குடவாசல் பேருந்து நிலையம் அருகே பின்னால் பெயர் விலாசம் கேட்டுத் தெரிந்த சொக்கு (எ) விஜயேந்திரன், த/பெ. செல்வராஜ் என்பவர் குடிபோதையில் பொது இடத்தில் குச்சிக்காரி மவனே தேவடியா மவனே என்று அசிங்கமான வார்த்தைகளால் உரத்த குரலில் திட்டிக்கொண்டும் கீழே ஆடை அணியாமல் ஜட்டியுடன் அசிங்கமாக நின்று கொண்டும் பொதுமக்களுக்கு போக்குவரத்திற்கு இடையூறு கொண்டிருந்தவரை எச்சரித்தும் கேளாமல் மீண்டும் மீண்டும் அதே செய்து ஈடுபட்டவரை குற்ற காரணம் கூறி கைது செய்து இரவு 08.30 மணிக்கு எதிரியுடன் நிலையம்வந்து நிலைய குற்ற எண் 43/2025 சட்டப்பிரிவு 296 (b) BNS r/w 4(1)(C) TNP Act ன் கீழ் உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்ய நாங்கள் உதவியாக இருந்தோம். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** :

இவ்வழக்கில் உதவி ஆய்வாளர் தனிநபர் சாட்சியங்கள் யாரையும் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். மேற்படி வழக்கில் எதிரி போக்குவரத்திற்கு இடையூறு

செய்வதாக தனிநபர் யாரும் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில் காவல் ஆய்வாளருடன் ரோந்து பணிக்கு செல்லவில்லை என்றாலும், எதிரியை சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் வைத்து கைது செய்யவில்லை என்றாலும் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அன்று ஆஜர் எதிரி மது போதையில் இல்லை என்றாலும் யாரையும் அசிங்கமான வார்த்தைகளால் திட்டவில்லை என்றாலும் சரியல்ல. காவல் ஆய்வாளர் எனது உயர் அதிகாரி என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்காக சாட்சியாக கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. வழக்கானது புள்ளி விவரத்திற்காக போடப்பட்டது என்றாலும், அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.24 13:19:39 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.

`